**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO. 110/2023**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06ஆம் நாள் வெள்ளி கிழமை

அ.சா.13 (பட்டியல் சாட்சி–13) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.எம்.மகேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | டாக்டர்.அருளரசன் | த/பெ.: | சாம்ராஜ் |
| கிராமம்: | திருவாரூர் | தாலுக்கா: | திருவாரூர் |
| மதம்: | இந்து | தொழில்: | மருத்துவர்.திருவாரூர் அரசுமருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை, |
| வயது: | 41 | முகவரி: | திருவாரூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 06.03.2026.

**முதல் விசாரணை :–**

29.10.2022–அன்று 45 வயது மதிக்கதக்க மாதாராமன் என்பவர் திருத்துறைப்பூண்டி அரசுப்பொதுமருத்துவமனையிலிருந்து, மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசுமருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அன்று அவருக்கு விபத்து பதிவேடு பதிவு செய்து மதியம் 03.00 மணியளவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைபிரிவில் அனுமதிக்கப்பட்டு அன்று பணியிலிருந்த அறுவைசிகிசை மருத்துவர் மற்றும் எலும்பு முறிவு மருத்துவர்கள் அவரை பரிசோதித்து அவருக்கு உரிய சிகிச்சை அளித்து அவருக்கு சிடி ஸ்கேன், மற்றும் எக்ஸ்ரே எடுக்கப்பட்டு அதில் அவருக்கு வலதுகை மணிகட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும், இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும், அதற்கு சிகிச்சை செய்து எலும்பு முறிவு வார்டுக்கு மாற்றம் செய்யப்பட்டது. எலும்பு முறிவு வார்டில் அவருக்கு 3 நாட்கள் சிகிச்சை அளிக்கப்பட்டது. அறுவை சிகிச்சை

செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர் 02.11.2022–ல் அன்று தனது சொந்த விருப்பத்தின் பேரில் தன்னை அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டதால் அவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்று சான்றிதழ் கொடுக்கப்பட்டு அவர் அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அ.சா.1–ற்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு நகல் **அ.சா.ஆ.9** ஆகும். நான் வழங்கிய காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.10** ஆகும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

அ.சா.1 29.10.2022–ல் தான் திருவாரூர் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்கிறார் என்றால் சரிதான். மேல் சிகிச்சைக்காக வரும் நபர்களின் விபத்து பதிவேடு நகலை பார்ப்போமா என்றால் இந்த வழக்கில் பார்க்கவில்லை. மாதாராமன் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சொன்ன விவரத்திற்கும் என்னிடம் சொன்ன விவரத்திற்கு வித்தியாசம் உள்ளதா என்றால், நான் விசாரித்தபோது தெரிந்த 4 நபர்கள் 27.10.2022–ல் இரவு 7.00 மணியளவில் அவர் வீட்டு அருகில் இரும்பு கம்பியால் அடித்ததாக என்னிடம் சொன்னார். அ.சா.1 திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்த போது எத்தனை நபர்கள் எந்த ஆயுதத்தால் அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால்

அதுப்பற்றி எனக்கு தெரியாது. சிடி ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே ஆகிய ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரி என்னிடம் இருந்து வாங்கி செல்லவில்லை. அ.சா.1 மாதாராமனுக்கு சிகிச்சை அளித்து அவருக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் மாதாராமனிடம் கொடுத்து விட்டோம், அதனால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. எனது விசாரணையின் போது சிடிஸ்கேன் மற்றும் எக்ஸ்ரே உள்ள ரிபோர்டை பார்த்து தான் எனது கேஸ் சீட்டில் குறிப்பிட்டு மெடிக்கல் ரெக்கார்ட்ஸ் டாக்குமெண்ட் ரூம்மில் (M.R.D) பராமரிக்கப்பட்டு வரும். அ.சா.1–ற்க்கு ஏற்பட்ட காயங்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று கரடுமுரடான பகுதியில் கீழே விழுந்தால் இது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு. காயத்தில் வயதை குறித்து எனது அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சில நேரம் முன்னதாகவே அது போன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.